முருகப்பெருமான் துணை

# மகான் பீமசேனன் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

01.07.2021, வியாழக்கிழமை

1. ஞான ஆனந்த சற்குருவே
ஞானயுகம் படைக்க வந்த
ஞான குருவே ஆறுமுக அரங்கா
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே பீமசேனன் யானும்
குறைவிலா பிலவ மிதுன திங்கள்
கருதியே மூவையீர் திகதி குருவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 17ம் நாள், 01.07.2021 வியாழக்கிழமை)
கண்டுரைப்பேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை உலகநலம் பெறஉரைப்பேன்
அறத்தில் பலமாக அரங்கஞானி
ஆசி தந்து அருளி வருகவே
அகிலத்தார் வணங்கி வர மாற்றம்
4. மாற்றம் உலக மக்களுக்கும்
மகத்துவம்பட பெருகி வரும்
ஆற்றல்பட தேக மனோபலமும்
அழியாமை எனும் சக்தி பெற்றும் சிறப்பர்
5. சிறப்புதரும் ஞானி ராஜயோகி
சித்திகளை உன்வழி மக்களடைய
மறுப்பின்றி ஞானிகள் பூசையை
முழுமதி தோறும் செய்து வருக
6. வருகவே மக்கள் கலந்திட
வணங்கி தருமத்தில் உதவிட
முருகா எனும் செபதபம் கூறி
முழுமை தரும் தீட்சை ஏற்க
7. ஏற்கவே எந்தனை போல்
இவ்வுலகில் புஜமனபலம் கூடி
ஆற்றலான எதிர்ப்பு சக்திபெருகி
ஆபத்தில்லா யோக வாழ்வுபெறுவர்
8. வாழ்வினில் ஞானவான்களாகவே
வழிகாட்டும் ஞானியர் தயவில்
ஊழ்வெல்லும் சக்தி கூடி
உலகமாற்றம் செய்யும் வண்ணம்
9. வண்ணமுடம் அரங்கன் வழியில்
வாழும் ஞானிகளாக உயர்வர்
எண்ணமதை அரங்கன் வழி
இனிதே உலகோர் இணைத்துவர

10. வருகவே வையகம் தன்னில்
வரமென அனைத்து பேருக்கும்
தரும பலமுடன் தவசி அருள்
தண்டாயுதன் துணையும் கிட்டி

11. கிட்டியே அற்புதம் நிகழும்
குறையிலா நல்லுலகம் ஆகும்
தட்டாது ஞான ஆட்சிபெறும்
தாமுரைத்த யோக பிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–